தி இந்து
30/01/2020



படம்: ஜெ.மனோகரன்

▲ ஆசிய சாதனைப் புத்தகத்தில் இடம் பெறுவதற்காக கோவையில் நேற்று ஒரே இடத்தில் 500 கோலங்கள் வரைந்த கல்லூரி மாணவிகள்.

# ஒரே இடத்தில் 500 கோலங்கள் வரைந்த கல்லூரி மாணவிகள்

● ஆசிய சாதனைப் புத்தகத்தில் இடம் பெற்றது

■ கோவை

கோவையில் ஒரே இடத்தில் கல்லூரி மாணவிகளால் 500 கோலங்கள் வரையப்பட்ட நிகழ்ச்சி, ஆசிய சாதனைப் புத்தகத்தில் இடம்பெற்றது.

கோவை அவினாசிலிங்கம் மகளிர் நிகர்நிலை பல்கலைக்கழகத்தில், குறிப்பிட்ட ஒரே இடத்தில், அதிக அளவிலான, தனித்துவமான கோலங்களை வரையும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில், பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த 500-க்கும் மேற்பட்ட மாணவிகள் கூடி, 500 புள்ளிக் கோலங்களை வரைந்தனர். டாடா சக்ரா கோல்டு டீ சார்பில் 'தமிழ் வழியில் வாழ்க்கையைக் கொண்டாடுதல்' என்ற தலைப்பில் இந்த சாதனை நிகழ்த்தப்பட்டது.

இதில் வரையப்பட்ட ஒவ்வொரு கோலமும், மற்ற கோலத்தில் இருந்து வித்தியாசப்பட்டு, மிகுந்த தனித்தன்மையுடன் அமைந்திருந்தது. ஆசிய சாதனைப் புத்தகக் குழுவினர் இந்த சாதனையைப் பார்வையிட்டு, அந்தப் புத்தகத்தில் இந்த சாதனை இடம் பெற்றதற்கான சான்றிதழை வழங்கினர்.